தேவனின் அன்பு ஊழியங்கள்

மங்கள வார்த்தை

GOD'S LOVES MINISTRIES - VOL-II-(ISSUE-4) - மாத இதழ் - ஏப்ரல் - 2021





மனம் திறந்து சில வார்த்தைகள்... 03
(சகோ. T. ஸ்டீபன், நிறுவனர், தேவனின் அன்பு ஊழியங்கள்)

இம்மாத மங்கள வார்த்தை: உன்னை விசாரிக்கிற உயிர்த்தெழுந்த இயேசு! 04
(சகோ. T. ஸ்டீபன், நிறுவனர், தேவனின் அன்பு ஊழியங்கள்)

தரிசனம் நிறைவேற ஜெபியுங்கள்! 09
(சகோதரி ஜோஸ்பின் ஸ்டீபன், ஆசிரியர், மங்கள வார்த்தை)

பெண்கள் பகுதி: சர்வ வல்லமையுள்ள தேவன்! 14
(சகோதரி ஜோஸ்பின் ஸ்டீபன், ஆசிரியர், மங்கள வார்த்தை)

வேத வினா போட்டி 16
(சகோதரி ஜோஸ்பின் ஸ்டீபன், ஆசிரியர், மங்கள வார்த்தை)

ஆண்டவரின் அற்புதங்கள் 17

மார்வெல் திருமண தகவல் மையம் 19

சிறுவர்கள் பகுதி/குட்டீஸ் ஸ்பெஷல்: வெற்றி வேண்டுமா? போராடு! 20
(சகோதரி ஸ்டெஃபி ஸ்டீபன், தேவனின் அன்பு ஊழியங்கள்)

வாலிபர் பகுதி: உயிர்த்தெழுந்தவரின் வல்லமை! 22
(சகோதரி பவ்யா டெரில், தேவனின் அன்பு ஊழியங்கள்)

தொலைக்காட்சி ஊழியங்களின் விபரங்கள் 25

எங்கள் சேவைகள் 27

மனம் திறந்து சில வார்த்தைகள்...



கிறிஸ்துவுக்குள் அன்பான தேவ பிள்ளைகளே,

உயிர்த்தெழுந்த ஆண்டவரும், உலக இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் இணையற்ற நாமத்தினாலே உங்கள் யாவரையும் வாழ்த்தி ஆசீர்வதிக்கிறேன்!

"அவர் இங்கே இல்லை, அவர் உயிர்த்தெழுந்தார்" (லூக்கா 24:6)

என்ற வேத வாக்கின்படியே, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நமக்காக பாடுபட்டு, சிலுவை சுமந்து, மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, தாம் சொன்னபடியே, மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார்! ஆகவே, ஆண்டவர் உயிர்த்தெழுந்த பண்டிகையை நாம் உற்சாகமாக கொண்டாடுவோம்! அவர் தாமே, இந்தப் புதிய மாதத்தில் கீழ்க்கண்ட வேத வசனத்தின்படி, உங்களை அற்புதமாய் ஆசீர்வதித்து வழிநடத்துமாறு கண்ணீரோடு ஜெபித்துள்ளேன். நமது அருமை ஆண்டவர் அப்படியே உங்களுக்குச் செய்தருளி, தம்முடைய நாமத்தை மகிமைப்படுத்துவாராக!

"எகிப்தின் சம்பாத்தியமும், எத்தியோப்பியாவின் வர்த்தகலாபமும், நெடிய ஆட்களாகிய சபேயரின் வர்த்தகலாபமும், உன்னிடத்திற்குத் தாண்டிவந்து, உன்னுடையதாகும்..." (ஏசாயா 45:14)

ஆண்டவருடைய பெரிய கிருபையினாலும், உங்கள் யாவரின் ஊக்கமான ஜெபங்களினாலும் மார்ச் 6, 2021 அன்று சென்னையில் நடைபெற்ற "அன்பரின் பாதத்தில் ஒரு நாள்" உபவாசக் கூட்டத்திலும், மார்ச் 13, 2021 அன்று திண்டுக்கல் மாவட்டம், செம்பட்டியில் நடைபெற்ற "வானத்தின் வாசல்" உபவாச ஜெபத்திலும், மார்ச் 14, 2021 அன்று திண்டுக்கல் மாவட்டம், வாழக்காபட்டியில் அமைந்துள்ள "சர்ச் ஆப் காட்" திருச்சபையில் நடைபெற்ற ஞாயிறு காலை ஆராதனைகளிலும், மார்ச் 21 & 22, 2021 ஆகிய தேதிகளில் சென்னை, கெத்சமனே பூரண சுவிசேஷ சபையில் நடைபெற்ற "அற்புத மாலை" சிறப்பு ஆசீர்வாதக் கூட்டங்களிலும் அடிமையை வல்லமையாக பயன்படுத்தினார்! அதற்காக ஆண்டவருக்கு என் உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றிசெலுத்துகிறேன் (சங்கீதம் 103:1,2). தொடர்ந்து எனக்காகவும், ஊழியங்களுக்காகவும் ஜெபித்துக்கொள்ளுங்கள்!

ஒருவேளை நீங்கள் கொரோனாவின் இரண்டாவது அலையைக் குறித்து, வேதனையோடு இருக்கலாம். ஆண்டவருடைய உயிர்த்தெழுந்த வல்லமை எப்பொழுதும் உங்களோடும், உங்கள் குடும்பத்தோடும் இருக்கிறபடியால், இனி நீங்கள் தீங்கை காண்பதில்லை!

"இஸ்ரவேலின் ராஜாவாகிய கர்த்தர் உன் நடுவிலே இருக்கிறார்; இனித் தீங்கைக் காணாதிருப்பாய்" (செப்பனியா 3:15)

என்ற வேத வசனத்தின்படி, பிறந்திருக்கிற இந்த புதிய மாதம் எல்லாவிதத்திலும் உங்களுக்கு ஆசீர்வாதமாய் இருக்கும்படி உங்களை வாழ்த்துகிறேன், உங்களுக்காக ஜெபிக்கிறேன்.

இந்த பண்டிகை காலங்களில் உங்களுக்கும் உங்கள் குடும்பத்தாருக்கும் ஈஸ்டர் நல்வாழ்த்துக்கள்

கிறிஸ்துவின் பணியில் உங்கள் அன்பு சகோதரன்,

(T. STEPHEN)

நிறுவனர், தேவனின் அன்பு ஊழியங்கள்

ஏப்ரல் மாத மங்கள வார்த்தை:



(சகோ. T.ஸ்டீபன், நிறுவனர்
தேவனின் அன்பு ஊழியங்கள், சென்னை)

உன்னை விசாரிக்கிற உயிர்த்தெழுந்த இயேசு!

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான எனது அருமை சகோதர-சகோதரிகளே,

நம்மை சிருஷ்டித்தவரும், நம்மை உண்டாக்கினவரும், நம்மை ஒருபோதும் மறந்து போகாதவருமாகிய இயேசு கிறிஸ்துவின் இணையற்ற நாமத்தினாலே உங்களை வாழ்த்தி ஆசீர்வதிக்கிறேன்.

இந்த நாளிலும் ஏப்ரல் மாத மங்கள வார்த்தையோடு உங்களை சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். உயிர்த்த ஆண்டவரின் பண்டிகையை கொண்டாடுகிற நீங்கள், "உன்னை விசாரிக்கிற உயிர்த்தெழுந்த இயேசு" என்ற இந்த மங்கள வார்த்தையை வாசிக்கும்போதே, அவர் உங்கள் பிரச்சனைகளை, கண்ணீர்களை மாற்றுவார். தாம் சொன்னபடி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்த ஆண்டவர் உங்களை விசாரிப்பதோடு, உங்களுக்கு அற்புதம் செய்து, உங்கள் வாழ்க்கையை வளமாக்குவார்! உங்களுடைய உபத்திரவம், பாடுகள், துக்கங்கள் யாவும் முடிந்துபோம்!

கர்த்தருடைய பாதபடியிலே அமர்ந்து என் பிள்ளைகளுக்கு நான் என்ன மங்கள வார்த்தை சொல்ல வேண்டும் என்று கேட்டபொழுது ஆண்டவர் கொடுத்த மூலவசனம்:

"அவர், இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே, அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்தரத்திற்கேதுவாக, ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி, தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார்" (1 பேதுரு 1:4)

ஆம், இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்ததினால், நமக்கு ஒரு மறுபிறப்பு கிடைத்திருக்கிறது. அது எப்படிப்பட்ட மறு பிறப்பு? நாம் பாவத்திற்கும், சாபத்திற்கும், மரித்து, நித்திய ஜீவனுக்கென்று பிழைத்திருக்கிற ஒரு புதிய மறுவாழ்வு, ஒரு புதிய அனுபவம் (ரோமர் 6:11)

இந்த மங்கள வார்த்தையை வாசித்துக்கொண்டிருக்கும் அன்பான தேவ பிள்ளைகளே, இன்றைக்கு இந்த உலகத்தில் யார் என்னை விசாரிப்பார்? யார் எனக்கு உதவிசெய்ய கூடும்? நான் தனிமையாக, அனாதையாக இருக்கின்றேனே என்று நீங்கள் சொல்லிக்கொண்டிருக்கலாம். ஆம், உங்களை விசாரிக்கும் ஒருவர் உண்டு! அவர் தான் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து! (1 பேதுரு 5:7). அவர் நமக்காக பாடுபட்டு, சிலுவையில் அறையப்பட்டு, தாம் சொன்னபடியே மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார்! (லூக்கா 24:6)

இந்த உலகத்தை கி.மு. என்றும் கி.பி. என்றும் சகாப்தம் படைத்த இயேசு கிறிஸ்து, தாம் சொன்னபடி 3-ஆம் நாள் உயிர்த்தெழுந்த உடனே, யார் யாரை, எப்படி விசாரித்தார்? எப்படி சீடர்களுக்கு தம்மை வெளிப்படுத்தினார்? என்பதைக் குறித்து நாம் ஜெபத்தோடு தியானிப்போம்:

1) ஸ்திரீயே ஏன் அழுகிறாய்? யாரைத் தேடுகிறாய்? என்று மகதலேனா மரியாளை விசாரித்த இயேசு:

உயிர்த்தெழுந்த ஆண்டவர் மகதலேனா மரியாளைப் பார்த்து, "ஸ்திரீயே ஏன் அழுகிறாய்? யாரை தேடுகிறாய்? என விசாரித்தார். வேதம் சொல்லுகிறது:

"இயேசு அவளைப் பார்த்து: ஸ்திரீயே, ஏன் அழுகிறாய், யாரைத் தேடுகிறாய் என்றார். அவள், அவரைத் தோட்டக்காரனென்று எண்ணி: ஐயா, நீர் அவரை எடுத்துக்கொண்டுபோனதுண்டானால், அவரை வைத்த இடத்தை எனக்குச் சொல்லும், நான் போய் அவரை எடுத்துக்கொள்ளுவேன் என்றாள். இயேசு அவளை நோக்கி: மரியாளே என்றார். அவள் திரும்பிப் பார்த்து: ரபூனி என்றாள், அதற்குப் போதகரே என்று அர்த்தமாம்" (யோவான் 20:15,16)

மகதலேனா மரியாளை ஆண்டவர் இப்படி விசாரிப்பதின் ரகசியம் என்ன? மகதலேனா மரியாளுக்குள் இருந்து ஆண்டவர் ஏழு அசுத்த ஆவிகளை துரத்தியிருந்தார் (மாற்கு 16:10). பேய்கள் உட்கார்ந்து ஆளுகை செய்த அவளது வாழ்க்கையை ஆண்டவர் பரிசுத்தப்படுத்தினார். அந்த நன்றி அவளுக்குள் இருந்தபடியால், இயேசு கிறிஸ்துவை அடக்கம்பண்ணப்பட்ட கல்லறையில், அவரை பார்க்காமல் நான் போகமாட்டேன் என்று உறுதியாக இருந்தாள்! வேதம் சொல்லுகிறது:

"பின்பு அந்தச் சீஷர்கள் தங்களுடைய இடத்திற்குத் திரும்பிப்போனார்கள். மரியாள் கல்லறையினருகே வெளியே நின்று அழுதுகொண்டிருந்தாள்: அப்படி அழுதுகொண்டிருக்கையில் அவள் குனிந்து கல்லறைக்குள்ளே பார்த்து" (யோவான் 20:10,11)



இயேசு உயிர்த்தெழுந்தார் என்று பேதுருவும், யோவானும் கேள்விப்பட்டபோது, அவர்கள் தங்களுடைய வீடுகளுக்குச் சென்றனர். ஆனால் மகதலேனா மரியாளோ இயேசுவின் கல்லறைக்கு வெளியே நின்று அழுதுகொண்டே இருந்தாள். அப்பொழுதுதான் இயேசு அவளுக்கு வெளிப்பட்டு, அவளைப் பார்த்து கேட்கிறார், "ஸ்திரீயே ஏன் அழுகிறாய்? யாரைத் தேடுகிறாய்? இந்த மங்கள வார்த்தையை வாசிக்கிற உங்களைப் பார்த்து ஆண்டவர் சொல்லுகிறார், யார் யார் மகதலேனா மரியாளைப் போல இன்றைக்கு ஆண்டவரைப் பார்க்காமல் போகமாட்டேன் என தங்கள் இருதயத்தில் சொல்லுகிறீர்களோ, அவர்களுக்குக் கர்த்தர் இப்பொழுதே தென்படுவார்

சகோதரர் டி.ஜி.எஸ் தினகரன் அவர்கள் மறைந்த பிப்ரவரி 20,2008 எனக்கு ஞாபகம் வருகிறது. அவர் மறுமைக்குள் பிரவேசித்துவிட்டார் என்ற செய்தியை கேட்டதும், நான் துடித்துப் போனேன். ஒரு சிறு பிள்ளையைப் போல நான் தேம்பித் தேம்பி அழுதேன். உடனே நானும் என்னுடைய மனைவியும் இயேசு அழைக்கிறார் அலுவலகத்திற்கு ஓடிப்போனோம். டி.ஜி.எஸ். தினகரன் அவர்கள் அருகிலிருந்து அழுதுகொண்டே இருந்தோம். ஏனென்றால் அந்த தகப்பனுடைய அன்பை அவ்வளவாய் ருசிபார்த்தவன் நான்! டி.ஜி.எஸ் தினகரன் அவர்களின் கடைசி பிறந்த நாள் கொண்டாட்டத்தின்போது, நானும் என் மனைவியும் அவரிடம் ஜெபித்துக்கொண்டோம். அப்பொழுது அவர், "மகனே இவ்வளவு நாளும் நீ தொழிலிலே கலக்கினாய். இனி ஆவிக்குரிய மண்டலத்தில் நீ கலக்கப்போகிறாய். எல்லாரும் உன்னை சட்டென்று திரும்பிப் பார்க்கக் கூடிய அளவில் உன்னுடைய ஊழியங்கள் அற்புதமாய் வளரும்!" என்றார். ஆம், அந்த தீர்க்கதரிசனம் எவ்வளவு உண்மையானது! இன்றைக்கு நானும், என் மனைவியும் அநேக ஆத்துமாக்களை ஆதாயம் செய்து, தேவ இராஜ்ஜியத்தைக் கட்டி எழுப்பும் பணியில் ஈடுபட்டுள்ளோம். அல்லேலூயா.

ஆம், மகதலேனா மரியாளை விசாரித்த ஆண்டவர், இன்றைக்கு, இப்பொழுதே உங்களையும் விசாரிப்பார்! கவலைப்படாதிருங்கள்!

2) ஏன் துக்கமாய் இருக்கிறீர்கள்? என்ன பேசிக்கொண்டு இருக்கறீர்கள்? என்று எம்மாவு சீஷர்களை விசாரித்த இயேசு:

"அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: நீங்கள் துக்கமுகமுள்ளவர்களாய் வழிநடந்து, ஒருவருக்கொருவர் சொல்லிக்கொள்ளுகிற காரியங்கள் என்னவென்று கேட்டார். அவர்களில் ஒருவனாகிய கிலெயோப்பா என்பவன் பிரதியுத்தரமாக: இந்நாட்களில் எருசலேமிலே நடந்தவைகளை அறியாதபடிக்கு நீர் அந்நியராயிருக்கிறீரோ என்றான்" (லூக்கா 24:17,18)

பின்மாற்றத்தில் சென்ற எம்மாவு சீடர்கள் இருவரையும் பார்த்து, ஆண்டவர் ஏன் துக்கமுகமாய் இருக்கிறீர்கள்? என்ன பேசிக்கொண்டிருக்கிறீர்கள்? என்று கேட்டபொழுது, "அவர்கள் சொன்னார்கள், எருசலேமில் என்ன நடக்கிறது என்று உமக்குத் தெரியாதா?" என்றனர். ஆண்டவரும் அவர்களோடு கூட வழிநடந்து, "இவைகளையெல்லாம் வேதத்தில் நீங்கள் வாசித்து இருக்கின்றீர்கள் தானே?" என்றார். இரவு நேரம் வந்துவிட்டதால், இயேசுவை, எம்மாவு சீடர்கள், அவர்களோடு தங்கும்படி கேட்டுக்கொண்டார்கள். அப்பொழுது எம்மாவு சீடர்களிடம், அப்பத்தை எடுத்து, அதை ஆசீர்வதித்து, பிட்டு அவர்களுக்குக் கொடுத்தபோது, அவர் தான் இயேசு என்பதை அவர்கள் அறிந்தார்கள். ஆனால் அவரோ மறைந்துபோனார் (லூக்கா 24:30-32). உடனே எம்மாவு சீடர்கள் எருசலேமுக்குத் திரும்பினார்கள் (லூக்கா 24:33).

மேத்யூ சேட்டா என்று எனக்கு நெருங்கிய நண்பர் ஒருவர் இருக்கிறார். அவருடைய வீட்டின் அருகில், இருக்கும் ஆரோக்கியராஜ் (வழக்கறிஞர்) என்பவர், தன் மகளின் திருமணத்திற்காக என்னை அழைத்திருந்தார். திருமண நாள் அன்று எனக்கு ஊழியம் அதிகம் இருந்தபடியால், என்னால் திருமணத்திற்குச் செல்ல முடியவில்லை. அடுத்த நாள் அந்தப் பிள்ளைகளைப் பார்த்து ஜெபித்து, ஆசீர்வதிக்கும்படி கடந்து சென்றேன். அந்தப் பிள்ளைகளை, வீட்டின் மாடியிலே பார்த்து, சத்தமாய் நான் ஜெபித்த ஜெபத்தைக் கேட்டு, கீழே வாடகைக்கு இருந்த பெரியவர் ஒருவர், தன்னுடைய மகன், இரண்டு கிட்னிகளும் செயலிழந்த நிலையில் இருப்பதாகவும், அவனுக்காக ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டார்கள். அப்பொழுதுதான், அவர்கள் கோவையிலிருந்து சென்னைக்கு, தன் மகனுடைய சிகிச்சைக்காக வந்திருந்தார்கள். அந்த பெரியவர், "என் மகனின் இரண்டு கிட்னிகளும் செயலிழந்து இருப்பதினால், நாங்கள் குடும்பமாய் சாப்பிட்டு அநேக நாட்களாகிவிட்டது. எங்கள் மகனுக்காக ஜெபியுங்கள். எங்கள் வீடு கடந்த பல ஆண்டுகளாக துக்க வீடாக இருக்கிறது" என்று சொன்னார். மருத்துவர்களால் கைவிடப்பட்ட அந்த மகனின் வயிற்றின் மீது என்னுடைய கரங்களை வைத்து ஜெபித்தேன். ஆண்டவர் இரண்டு புதிய கிட்னிகளை அவருக்குப் பொருத்துவதை என் ஆவிக்குரிய கண்களினால் நான் பார்த்தேன். புதிய கிட்னிகளை பொருத்திய ஆண்டவருக்கு நன்றி செலுத்திவிட்டு, கடந்து சென்றுவிட்டேன்.

பல வருடங்களுக்குப் பிறகு, நான் கோவை காருண்யா நகருக்கு ஊழியத்திற்காக சென்றிருந்தபோது, அந்தப் பெரியவரை மறுபடியும் சந்திக்க நேர்ந்தது. உடனே ஓடிப்போய் ஒரு குழந்தையை என்னிடம் தூக்கிக் கொடுத்து, என்னை யார் என்று அடையாளம் தெரிகிறதா? என்றார். எந்த மகனுக்கு கிட்னிகள் இரண்டும் செயலிழந்துவிட்டது என்று சென்னையிலுள்ள வழக்கறிஞர் வீட்டில் வைத்து ஜெபித்தீர்களோ, அதே மகனுக்குப் பிறந்ததுதான் இந்த குழந்தை என்றார். அல்லேலூயா.

நீங்களும் ஆண்டவரை விசுவாசிக்கும்போது, இதே அற்புதங்கள் உங்களுக்கும் நடக்கும்! உங்கள் வாழ்வில் இருக்கும் நோய்களை, பொருளாதாரப் பற்றாக்குறைகளை, பிசாசின் கட்டுகளை, ஆண்டவரின் உயிர்த்தெழுந்த வல்லமை முறியடித்து, அற்புதங்களை நடப்பிக்கும்! மனம் கலங்காதிருங்கள்!

3) ஏன் கலங்குகிறீர்கள்? உங்கள் இருதயங்களில் சந்தேகங்கள் எழும்புகிறதென்ன? என்று சீஷர்களுக்கு தம்மை வெளிப்படுத்தி, அவர்களை விசாரித்த இயேசு:

"அவர் அவர்களை நோக்கி: நீங்கள் ஏன் கலங்குகிறீர்கள்; உங்கள் இருதயங்களில் சந்தேகங்கள் எழும்புகிறதென்ன? நான்தான் என்று அறியும்படி, எனக்கு மாம்சமும் எலும்புகளும் உண்டாயிருக்கிறதுபோல ஒரு ஆவிக்கு இராதே என்று சொல்லி, தம்முடைய கைகளையும் கால்களையும் அவர்களுக்குக் காண்பித்தார்" (லூக்கா 24:38-40)

அந்நியராயிருக்கிறீரோ என்றான்" (லூக்கா 24:17,18)



இயேசு கிறிஸ்துவை சிலுவையில் அறைந்து, அடக்கம் செய்த பின்னர், எப்பொழுது என்ன நடக்குமோ? என்று 11 சீடர்களும் பயந்திருந்தார்கள். இயேசுவை நம்பி எல்லா தொழிலையும் விட்டு, வந்தோமே, இப்பொழுது அவரும் மரித்துவிட்டாரே, இதற்குமேல் என்ன செய்யப்போகிறோம்? என்று பயந்துகொண்டிருக்கையில், இயேசு அவர்களுக்கு தம்மை வெளிப்படுத்தினார். தம்முடைய சீடர்களைப் பார்த்து, "உங்களுக்குச் சமாதானம்" என்று கூறினார். அப்பொழுது சீடர்கள் இயேசுவை சந்தேகத்தோடு பார்த்தார்கள். ஆனால், ஆண்டவரோ, என் கைகளையும், கால்களையும் பாருங்கள், என்னை தொட்டுப்பாருங்கள் என்றார். தம்முடைய சீடன் தோமாவுக்கு ஆண்டவர் தம் கைகளை காண்பித்ததோடு, பிரத்தியேகமாக தன் விலாவிலே அவனது கையை போடும்படி கேட்டுக்கொண்டார்! (யோவான் 20:25-27)

ஆம், உயிர்த்த ஆண்டவரைப் பார்த்து, அவருடைய சீடர்கள் சந்தேகப்பட்டது உண்மை! அதுபோல இன்றைக்கு உங்கள் வாழ்விலே, உங்கள் குடும்பங்களிலே சமாதானக்குறைவுகளை, சண்டைகளை ஏற்படுத்தும் சந்தேகப் பேய்களை ஆண்டவர் துரத்துகிறார். இயேசுவின் சீடர்களுக்கு, உயிர்த்தெழுதலைக் குறித்த சந்தேகம் இருந்தது. ஆகவே தான் அவர்களுக்கு தம்மை காண்பித்தார். நான் மரித்தேன் ஆனாலும் சதா காலங்களிலும் உயிரோடிருக்கிறேன் என்று வெளிப்படுத்தினார் (வெளிப்படுத்தல் 1:18). அந்த தேவன் தாமே உங்கள் வாழ்விலே, உங்கள் குடும்பங்களிலே இருக்கும் எல்லா சந்தேகங்களையும் துரத்தி, உங்கள் குடும்பங்களில் ஐக்கியத்தை ஏற்படுத்துவாராக!

நாகர்கோவிலில், ஜெயபால் (வயது 44) என்று ஒரு தம்பி இருக்கிறார். அவர் மரத்தில் ஏறி, கீழே விழுந்ததில், அவருடைய இடுப்பு எலும்பு உடைந்து, இடுப்புக்குக் கீழே உணர்வே இல்லாமல் ஆகிவிட்டது. உணர்ச்சியுள்ள நரம்புகள் எல்லாம் துண்டிக்கப்பட்டது. மலக்கழிவுகள், சிறுநீர் எல்லாமே அவரது படுக்கையிலேயே 3 வருடங்களாக போய்க்கொண்டிருந்தது.



சாவதைத் தவிர வேறு வழி இல்லை என தன் தோழரிடம் பேசிக்கொண்டிருந்த போது, அவருடைய தோழர் சொன்னார், நீ சகோ ஸ்டீபன் அவர்கள் ஊழியத்தோடு, தொலைபேசியில் தொடர்புகொண்டு, ஜெபித்துக்கொள். அதற்குப் பின் தற்கொலை செய்வதா? வேண்டாமா? என முடிவு செய் என்றார். உடனே அவர் அடைக்கலப்பட்டணத்தோடு தொடர்புகொண்டு ஜெபித்துக்கொண்டார். எங்கள் ஜெபகோபுரத்திலுள்ள ஜெப வீரர், இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல் அழைக்கிற தேவன் உங்கள் உடல் உறுப்புக்களை உருவாக்குகிறார். செத்துப்போன உங்கள் சரீரத்தில், நரம்புகளில் உயிர்த்தெழுந்த ஆண்டவரின் வல்லமை இறங்கி, உங்கள் சரீரத்தை இப்பொழுதே உயிர்ப்பிக்கிறது என்று அழுது, போராடி ஜெபித்தார்.

ஜெபித்த பின் அவர் தொலைபேசியை வைத்துவிட்டார். அதன் பின்னர் ஜெயபால் அவர்கள், தன்னுடைய கால்களை, கைகளை மெல்ல அசைத்துப் பார்த்தார். நன்றாக அசைந்தது. தினந்தோறும் ஜெப கோபுரத்தோடு தொடர்புகொண்டு, ஜெபிக்க ஆரம்பித்தார். அவரது தற்கொலை எண்ணம் முற்றிலும் மாறியது. ஆண்டவர் அவரது செத்துப்போன நரம்புகளை உருவாக்கினார். அசையாத அவரது சரீரத்தில், ஆண்டவர் தம்முடைய உயிர்ப்பின் வல்லமையை அனுப்பி, அவரை சுகப்படுத்தினார்! இன்றைக்கும் அவர் தன்னுடைய எல்லா வேலைகளையும் அவரே செய்து, சுகபெலத்தோடு வாழ்ந்து வருகிறார்!

ஆம், ஆண்டவரை சந்தேகப்படாமல் விசுவாசிக்கும்போது, இதே அற்புதங்களை அவர் உங்கள் வாழ்விலும் செய்வார்! அல்லேலூயா!

4) பேதுருவின் தலைமையில் மீன்பிடிக்கச் சென்ற தம்முடைய சீஷர்களை விசாரித்த இயேசு:

"விடியற்காலமானபோது, இயேசு கரையிலே நின்றார்; அவரை இயேசு என்று சீஷர்கள் அறியாதிருந்தார்கள். இயேசு அவர்களை நோக்கி: பிள்ளைகளே, புசிக்கிறதற்கு ஏதாகிலும் உங்களிடத்தில் உண்டா என்றார். அதற்கு அவர்கள்: ஒன்றுமில்லை என்றார்கள். அப்பொழுது அவர்: நீங்கள் படவுக்கு வலதுபுறமாக வலையைப் போடுங்கள், அப்பொழுது உங்களுக்கு அகப்படும் என்றார். அப்படியே அவர்கள் போட்டு, திரளான மீன்கள் அகப்பட்டதினால், அதை இழுக்கமாட்டாதிருந்தார்கள்" (யோவான் 21:4-6)



இயேசு கிறிஸ்து சிலுவையில் அறைந்து, அடக்கம்பண்ணப்பட்ட பின்னர், அவருடைய சீடர்கள் மீன்பிடித் தொழிலுக்குச் சென்றார்கள். அவர்கள் இரவு முழுவதும் மீன் பிடித்தும், ஒன்றும் அகப்படாமல் கரையை நோக்கி, வந்துகொண்டிருந்தார்கள். ஆனால் அந்த சீடர்களைத் தேடி, விடியற்காலத்திலே இயேசு, கடற்கரையிலே நின்றார். புசிக்கிறதற்கு உங்களிடம் ஏதாகிலும் உண்டா? என கேட்டார். அதற்கு அவர்கள் ஒன்றுமில்லை என்றார்கள். தம்முடைய சீடர்கள் பேதுரு, யாக்கோபு, யோவான் பசி தாங்கமாட்டார்கள் என்பதை ஆண்டவர் நன்கு அறிந்திருந்தார். ஆண்டவர் தம்முடைய சீடர்களைப் பார்த்து, வலதுபுறமாக வலையைப் போடுங்கள் என்றார். சீடர்கள் மீன்களை பிடித்து, திரும்பி வரும் முன், அவர்களுக்காக ஆண்டவர் சமயல்காரனாக மாறி, அடுப்பில் கரி நெருப்புப் போட்டு, சுடச்சுட அப்பமும், மீனும் தயார்செய்து, தம்முடைய சீடர்களுக்குப் பரிமாற காத்திருந்தார். வேதம் சொல்லுகிறது:

"அவர்கள் கரையிலே வந்திறங்கினபோது, கரிநெருப்புப் போட்டிருக்கிறதையும், அதின்மேல் மீன் வைத்திருக்கிறதையும், அப்பத்தையும் கண்டார்கள்" (யோவான் 21:9)

தன்னுடைய சீடர்கள் கரைக்கு வந்ததும், அவர்களுக்குச் சுடச் சுட உணவு பரிமாறினார் (யோவான் 21:13) தம்முடைய சீடர்களின் வயிற்றுப் பசியை ஆற்றுவதில் அவருக்கு எவ்வளவு சந்தோஷம் பாருங்கள்!

இந்த மங்கள வார்த்தையை வாசிக்கிற உங்களைப் பார்த்து ஆண்டவர், "உங்கள் தேவை என்ன என்பதை நான் அறிந்திருக்கிறேன்" என்று சொல்லுகிறார். அவர் உங்கள் வலையை எங்கே போட்டால், உங்கள் தேவைகள் பூர்த்தியாகும் என்பதை துல்லியமாக சொல்லுவார்! நீங்கள் இழுக்க முடியாத அளவிற்கு, நிரம்பி வழியும் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வீர்கள்! ஆண்டவர் தம்முடைய முகத்தை உங்கள் மீது பிரகாசிக்கச் செய்யும்போது, இழுக்க முடியாத அளவுக்கு ஆசீர்வாதங்கள் உங்கள் களஞ்சியங்களில் தானாக வந்து சேரும்! அல்லேலூயா. வேத புத்தகத்தில் எனக்குப் பிடித்தமான ஒரு வசனம் இருக்கிறது:

"எகிப்தின் சம்பாத்தியமும், எத்தியோப்பியாவின் வர்த்தகலாபமும், நெடிய ஆட்களாகிய சபேயரின் வர்த்தகலாபமும், உன்னிடத்திற்குத் தாண்டிவந்து, உன்னுடையதாகும்..." (ஏசாயா 45:14)

ஆம், ஆண்டவரின் உயிர்த்தொழுந்த வல்லமை, உங்கள் வாழ்வில் இன்றிலிருந்து அற்புதங்களைச் செய்யப்போகிறது. நெடுநாள் காத்திருந்த ஆசீர்வாதங்கள் உங்களை தேடி வரும்! உங்கள் கோர்ட் பிரச்சனைகள், வழக்குகள் தீர்ந்து, உங்களுக்கு வரவேண்டிய சொத்து உங்களுக்கு தானாக கிடைக்கும்! பிள்ளைகள் சண்டையிட்டு, குடும்ப வாழ்வில் பிரிந்துவிடுவார்களோ என்ற நிலை மாறும்! ஆண்டவருடைய உயிர்த்தெழுந்த வல்லமை இதை உங்கள் வாழ்வில் நடப்பிக்கும்! அல்லேலூயா.

உயிர்த்தெழுந்த ஆண்டவரை நம்பி, உங்கள் வாழ்க்கையை அவரிடம் இன்றே அர்ப்பணியுங்கள்! அற்புதங்களை ருசியுங்கள்! உயிர்த்த ஆண்டவர் உங்கள் குறைவுகளையெல்லாம் தம்முடைய மகிமையிலே நிறைவாக்கி, உங்களை ஆசீர்வதித்து, வழிநடத்துவாராக! (பிலிப்பியர் 4:19) அவருடைய கிருபை எப்பொழுதும் உங்கள் அனைவரோடும் கூட இருப்பதாக! ஆமென்.

இந்த பண்டிகை காலங்களில் உங்களுக்கும் உங்கள் குடும்பத்தாருக்கும் ஈஸ்டர் நல்வாழ்த்துக்கள்!





தரிசனம் நிறைவேற ஜெபியுங்கள்!

(சகோதரி ஜோஸ்பின் ஸ்டீவன், ஆசிரியர், மங்கள வார்த்தை)

கிறிஸ்துவுக்குள் அன்பான தேவ பிள்ளைகளே,

உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தினால் உங்கள் யாவருக்கும் அன்பின் ஈஸ்டர் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மாதம் புதிதாக ஆண்டவர் சகோதரர் அவர்களுக்குக் கொடுத்த தரிசனங்களைப் பற்றி எழுதுவதில் அதிக மகிழ்ச்சியடைகிறேன். ஆண்டவர் அன்பு சகோதரர் அவர்களுக்குக் கொடுத்த தரிசனங்களின்படியே இவ்வூழியம் ஆரம்பிக்கப்பட்டது. இதுவரை அன்பு சகோதரருக்குக் கொடுத்துள்ள அனைத்து தரிசனங்களையும் ஆண்டவர் நிறைவேற்றியுள்ளார். அதற்காக ஆண்டவருக்கு நன்றிசெலுத்துகிறேன் (சங்கீதம் 103:1,2). தரிசனம் என்பது எந்தவொரு ஊழியனுக்கும், ஊழியக்காரிக்கும் மிகவும் இன்றியமையாதது. தேவனுடைய ஊழியன் ஆண்டவரின் பாதத்தில் காத்திருந்து, தரிசனங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அவரிடமிருந்து பெற்றுக்கொண்ட தரிசனங்கள் நிறைவேற தொடர்ந்து ஜெபிக்க வேண்டும்.

"குறித்தகாலத்துக்குத் தரிசனம் இன்னும் வைக்கப்பட்டிருக்கிறது முடிவிலே அது விளங்கும், அது பொய் சொல்லாது அது தாமதித்தாலும் அதற்குக் காத்திரு அது நிச்சயமாய் வரும், அது தாமதிப்பதில்லை" (ஆபகூக் 2:3)

ஒரு வேளை ஆண்டவர் கொடுக்கும் தரிசனம் நிறைவேற காலம் தாமதிப்பது போல் இருந்தாலும், அந்த தரிசனம் நிறைவேறும் காலம் வரும்பொழுது, நிச்சயமாய் அது நடக்கும்!

புதிய கிளை ஜெப கோபுரங்கள் திறக்கப்பட ஜெபியுங்கள்:

ஆண்டவர் சகோதரர் அவர்களுக்கு இந்த ஆண்டில் இரண்டு புதிய, கிளை ஜெப கோபுரங்களை திறக்கும்படி தரிசனம் கொடுத்தார். ஆண்டவர் கொடுத்த தரிசனத்தின்படியே, கோயம்புத்தூரிலும், பெங்களூரிலும் புதிய கிளை ஜெப கோபுரங்களை நிறுவும் முயற்சியில் நாங்கள் ஈடுபட்டுள்ளோம்.

கோவை அடைக்கலப்பட்டணம், ஒரு "ஆறுதலின் தோட்டம்":

நீலகிரி, கூடலூர், கோயம்புத்தூர், மேட்டுப்பாளையம், பொள்ளாச்சி, திருப்பூர், பல்லடம், சேலம், ஈரோடு போன்ற இடங்களிலிருந்து திரளான ஆத்துமாக்கள் அன்பு சகோதரரை நேரடியாக பார்த்து ஜெபிப்பதற்கென்று சென்னைக்கு வருகின்றார்கள். அவர்கள் யாவரும், அவர்கள் இருக்கும் இடங்களிலே பயன்பெறும்பொருட்டு, ஆண்டவர் கோவையில் ஜெப கோபுரத்தை நிறுவும்படி ஒரு வழியை திறந்துள்ளார். கோவை ஜெப கோபுரத்திற்கு ஆண்டவர் "ஆறுதலின் தோட்டம்" என்ற பெயரை கொடுத்துள்ளார்

கோவை "ஆறுதலின் தோட்டம்", காருண்யா பல்கலைக்கழகம் செல்லும் வழியில், தென்கரை என்ற ஊரில் அமையவிருக்கிறது. இங்கு 80 சென்ட் இடத்தை ஜெபத்தோடு குத்தகைக்கு (Lease Agreement) ஒப்பந்தம் போட்டுள்ளோம். நோவா எப்படி ஆண்டவருடைய திட்டத்தின்படி, பேழையை வடிவமைத்தாரோ, அதுபோல கோவை

“ஆறுதலின் தோட்டத்தை” நாங்கள் வடிவமைத்துள்ளோம். ஜெப கோபுரத்தில், வரவேற்பு அறை, தியான அறை, ஆலோசனை மையம், புத்தக நிலையம், வாகனம் நிறுத்தும் இடம் உட்பட அனைத்து வசதிகளையும் அமைக்க வேண்டும். ஆண்டவர் தாமே இதற்கான தேவைகளையெல்லாம் அற்புதமாய் சந்திக்கும்படி ஊக்கமாய் ஜெபியுங்கள்.



சாலொமோன் ஆண்டவருக்காக ஒரு தேவாலயத்தைக் கட்டினான். ஆண்டவர் அவனுக்காக ஒரு பெரிய அரண்மனையை கொடுத்தார். அதுபோல அடைக்கலப்பட்டணத்தை கட்டி எழுப்ப ஜெபிக்கிற, அந்த ஊழியத்தை காணிக்கைகளினால் தாங்குகிற உங்களுக்கென்று ஆண்டவர் நிச்சயம் ஒரு சொந்த வீட்டைக் கட்டித் தருவார்! உங்களை ஆசீர்வதிப்பார்! கவலைப்படாதிருங்கள்.

மேலும் பெங்களூர் நகரத்திலும் ஜெப கோபுரத்தை உருவாக்க ஆண்டவர் நல்ல நபர்களை எழுப்பித் தருமாறு தொடர்ந்து ஜெபியுங்கள்.

சென்னையில் அடைக்கலப்பட்டணம் (ஜெப கோபுரம்):

சென்னையில் தேவனின் அன்பு ஊழியங்களின் சார்பாக ஜெப கோபுரத்தை நிர்வாக அலுவலகத்தோடு கட்டி எழுப்ப நீங்கள் யாவரும் தொடர்ந்து ஊக்கமாய் ஜெபித்து வருவதோடு, இந்த ஊழியத்தையும் தாங்கிவருகிறீர்கள். ஆண்டவர் தாமே இதை நினைத்தருளி, உங்களையும், உங்கள் குடும்பத்தையும் அளவில்லாமல் ஆசீர்வதிப்பாராக! (மத்தேயு 25:40)

ரிலையன்ஸ் டவர் அகற்றப்பட ஜெபியுங்கள்:

சென்னை ஜெப கோபுரத்தைக் கட்டுவதற்கென்று வாங்கியுள்ள இடத்தில், ரிலையன்ஸ் டவர் (Reliance Tower) இன்னும் அகற்றப்படாமல் இருக்கிறது. ஆண்டவர் உடனே ரிலையன்ஸ் டவரை அகற்றித் தரும்படி ஊக்கமாய் ஜெபியுங்கள்! உங்கள் யாவருடைய கூட்டுப் பிரார்த்தனையை ஆண்டவர் கேட்டு, நிச்சயம் அற்புதங்களைச் செய்யவாரென்று நான் நம்புகிறேன் (மத்தேயு 18:19). ஏனென்றால், அவர் ஜெபத்தைக் கேட்கிறவர் (சங்கீதம் 65:2)

புதிய மொழிகளில், புதிய சேனல்களில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்:

உலகெங்கிலும் தேவனின் அன்பு ஊழியங்கள் மூலம் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் அனுதினமும் ஒளிபரப்பப்படுகின்றன. இதற்காக சகோதரர் அவர்கள் ஓய்வின்றி, பிரத்யேகமாக ஜெபித்து, தேவ செய்திகளை தயாரித்து, தொலைக்காட்சியில் வழங்குகிறார்கள். ஆண்டுதோறும் 6235 தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை, 5 மொழிகளில், 25 சேனல்களில் உலகெங்கிலும் ஒளிபரப்பி வருகிறோம். மேலும் இந்த ஆண்டிலிருந்து புதிய தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை, புதிய மொழிகளில், புதிய சேனல்களில் ஒளிபரப்ப ஆண்டவர் சகோதரருக்கு தரிசனம் கொடுத்தார். இந்த தரிசனத்தை ஆண்டவர் நிறைவேற்றும்படி ஊக்கமாய் ஜெபியுங்கள்!



ஜெபியுங்கள், அற்புதங்களை காண்பீர்கள்:

ஆண்டவர் அன்பு சகோதரருக்குக் கொடுத்துள்ள மேற்கண்ட தரிசனங்கள் நிறைவேற எங்களோடு இணைந்து நீங்களும் அனுதினமும் ஊக்கமாய் ஜெபியுங்கள். ஆண்டவர் நிச்சயம் உங்கள் ஜெபங்களைக் கேட்டு, மகிமையான காரியங்களை தேவனின் அன்பு ஊழியங்களில் செய்தருள்வார்! நன்றி மறவாமல் உங்களையும், உங்கள் குடும்பத்தினர் ஒவ்வொருவரையும் கீழ்க்கண்ட வேத வசனத்தின்படி ஆசீர்வதிக்குமாறு ஒவ்வொரு நாளும் நாங்கள் குடும்பமாக ஜெபிக்கிறோம்.

"உங்கள் கிரியையையும், நீங்கள் பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ்செய்ததினாலும் செய்து வருகிறதினாலும் தமது நாமத்தினிமித்தம் காண்பித்த அன்புள்ள பிரயாசத்தையும் மறந்துவிடுகிறதற்குத் தேவன் அநீதியுள்ளவரல்லவே" [எபிரெயர் 6:10]

ஆம் பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, தேவனுடைய ஆவியினாலே எல்லாம் கூடும் (சகரியா 4:6). இது எங்களால் உண்டானதல்ல. தேவனுடைய ஈவு (எபேசியர் 2:8)

ஆண்டவர் தாமே உங்களை ஆசீர்வாதிப்பாராக!

பிறந்த நாள் மற்றும் திருமண நாள் வாழ்த்துக்கள்!

ஏப்ரல் மாதம் பிறந்த நாள் மற்றும் திருமண நாள் காணும் உங்கள் அனைவருக்கும் தேவனின் அன்பு ஊழியங்களின் சார்பாகவும், எங்கள் குடும்பத்தின் சார்பாகவும் அன்பின் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம்!



"வெண்கலக் கதவுகளை உடைத்து, இருப்புத் தாழ்ப்பாள்களை முறித்து, அந்தகாரத்தில் இருக்கிற பொக்கிஷங்களையும், ஒளிப்பிடத்தில் இருக்கிற புதையல்களையும் உனக்குக் கொடுப்பேன்" (ஏசாயா 45:4).

ஈஸ்டர் வாழ்த்துக்கள்!

இந்த பண்டிகை காலங்களில் உங்களுக்கும் உங்கள் குடும்பத்தாருக்கும் ஈஸ்டர் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம்!



சர்வ வல்லமையுள்ள தேவன்!



(சகோதரி ஜோஸ்பின் ஸ்டீபன்,
தேவனின் அன்பு ஊழியங்கள், சென்னை)



கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான எனது அருமை சகோதர சகோதரிகளே!

உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தினால் உங்கள் யாவருக்கும் அன்பின் ஈஸ்டர் தின நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்

உங்கள் யாவரையும் மறுபடியும் இந்த ஏப்ரல் மாத மங்கள வார்த்தை வழியாக சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி! கடந்த மாதம் வரை தேவன் நம்மைப் அற்புதமாய் பாதுகாத்தார். வல்லமையுள்ள தேவன் மகிமையான காரியங்களை நம்முடைய வாழ்வில் செய்தருளினார். இந்த மாதத்தில் ஆண்டவர் இன்னும் நம்முடைய வாழ்வில் என்னென்ன வல்லமையான காரியங்களைச் செய்யப் போகிறார் என்பதை அறிந்துகொள்ளப் போகிறோம். வேதம் சொல்லுகிறது:

"சர்வவல்லமையுள்ள தேவன் என்னும் நாமத்தினால் நான் ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் தரிசனமானேன்" (யாத்திராகம் 6:3)

"சர்வ வல்லமையுள்ள தேவன்" என்று சொல்லும்போதே அவருடைய வல்லமை நம்மேல் இறங்கி வருகிறது. இயற்கைக்கு ஒரு வல்லமை உண்டு, மின்சாரத்திற்கு ஒரு வல்லமை உண்டு, கடல் அலைகளுக்கு ஒரு வல்லமை உண்டு! இவையெல்லாம் கர்த்தரின் கையின் கிரியைகள். எல்லா வல்லமைகளையும் ஆண்டவர் நமக்குக் கீழ்ப்படுத்துகிறவராய் இருக்கிறார் (சங்கீதம் 8:6) எனவே, அவர் நம்பட்சத்தில் நிற்கும்போது பில்லிசூனிய வல்லமைகளுக்கோ, செய்வினைகளுக்கோ, நாம் பயப்பட தேவை இல்லை. கர்த்தர் அன்றைக்கு ஆபிரகாமைப் பார்த்து,

"கர்த்தர் ஆபிராமுக்குத் தரிசனமாகி, நான் சர்வவல்லமையுள்ள தேவன்: நீ எனக்கு முன்பாக நடந்து கொண்டு உத்தமனாயிரு" (ஆதியாகமம் 17:1)

என்றார். யோபு பக்தன் ஆண்டவரைப் பார்த்து இவ்விதமாக துதித்தார்!

"தேவரீர் சகலத்தையும் செய்யவல்லவர்; நீர் செய்ய நினைத்தது தடைபடாது என்பதை அறிந்திருக்கிறேன்" (யோபு 42:2)

தேவனுடைய பிள்ளைகளே, உங்களுடைய வாயிலும், தேவன் எப்பொழுதும் சர்வ வல்லமையுள்ளவர் என்கிற விசுவாச அறிக்கை இருக்கட்டும். அவருடைய வல்லமையை நம்முடைய வாழ்வில் எப்படியெல்லாம் விளங்கப் பண்ணுகிறார் என்பதை பார்ப்போமா!

1) முதலாவதாக, உதவி செய்ய வல்லவர்!

"அவர்தாமே சோதிக்கப்பட்டுப் பாடுபட்டதினாலே, அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவிசெய்ய வல்லவராயிருக்கிறார்" (எபிரெயர் 2:18)

நாம் கடந்து வந்திருக்கிற பாடுகளின் பாதைகளை தேவன் நன்கு அறிந்திருக்கிறார். நம்மைப்போல எல்லாவற்றிலும் அவர் சோதிக்கப்பட்டு, பாடுபட்டு, சிலுவையின்

கசப்பான அனுபவத்திற்குள் சென்றதினாலே, அவர் நமக்கு உதவிசெய்ய வல்லவராய் இருக்கிறார். இந்த உலகத்திலே எல்லா உதவிகளையும் நமக்குச் செய்து நம்மைத் தூக்கிவிட எந்த மனுஷனும் கிடையாது. அதுபோல இரவும், பகலும் தூங்காமல், யாராலும் உதவி செய்யவும் முடியாது. ஆனால் நம் இயேசு கிறிஸ்து மனுஷகுமாரனாகவும், தேவ குமாரனாகவும் இருக்கிறபடியால், நமக்கு எப்பொழுதும் உதவி செய்ய வல்லமையுள்ளவராய் இருக்கிறார்.

அவர் பூமியில் இருந்த நாட்களில் யார், யார் அவரிடத்தில் வந்து உதவி கேட்டார்களோ அத்தனை பேருக்கும் அவர் உதவி செய்தார். ஒரு முறை ஒரு கானானிய ஸ்திரீ இயேசுவிடத்தில் வந்து, "ஆண்டவரே, தாவீதின் குமாரனே எனக்கு இரங்கும். என் மகள் பிசாசின் கட்டினால் வேதனைப்படுகிறாள்" என்று கேட்ட உடனே, "ஸ்திரீயே உன் விசுவாசம் பெரிது. நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக்கடவது" என்றார் (மத்தேயு 15:22-28) அந்நேரமே அவளுடைய மகள் விடுதலையடைந்தாள். நமது தேவன் எவ்வளவு வல்லமையுள்ள தேவன் பாருங்கள்!

2) இரண்டாவதாக, தப்புவிக்க வல்லவர்!

"நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார்; அவர் எரிகிற அக்கினிச்சூளைக்கும், ராஜாவாகிய உம்முடைய கைக்கும் நீங்கலாக்கி விடுவிப்பார்" (தானியேல் 3:17)



அவ்வளவு பெரிய ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரைப் பார்த்து சாவால்விட இந்த இளம் வாலிபர்களான சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோவிற்கு எங்கிருந்து துணிச்சல் வந்தது. வாலிபர்களோ அடிமைகள், சிறைக் கைதிகள்! ஆனால், ஒன்று மாத்திரம் அவர்களுக்குத் தெரிந்திருந்தது! "அவர்கள் ஆராதிக்கிற தேவன் வல்லமையுள்ளவர்" அவர் எல்லாத் தீங்கினின்றும் அவர்களை தப்புவிக்க வல்லமையுள்ளவர்" என்பதே! கோபத்தினால் ராஜா மூவரையும் அக்கினி சூளையிலே போட்டது உண்மை தான்! ஆனால், அந்த அக்கினி அவர்களை ஒன்றும் செய்ய முடியவில்லை. காரணம், கர்த்தர் அவர்களோடிருந்தார்.

தேவ பிள்ளைகளே, பாடுகளும் போராட்டங்களும் நிறைந்த இந்த உலகில், ஆண்டவர் மாத்திரமே உங்களுக்கு உதவிசெய்து, உங்களை பிரச்சனைகளிலிருந்து தப்புவிக்க முடியும் என்பதை அறிந்து, அவரிடத்தில் உங்களை அர்ப்பணியுங்கள். அவர் உங்களை விட்டு விலகுவதும் இல்லை, உங்களை கைவிடுவதும் இல்லை! அவர் எவ்வளவு பெரிய வியாதியினின்றும், பிரச்சனைகளினின்றும் உங்களை தப்புவிக்க வல்லமையுள்ளவராய் இருக்கிறார்! அல்லேலூயா.

3) மூன்றாவதாக, வாக்குத்தத்தங்களை நிறைவேற்ற வல்லமையுள்ளவர்!

"தேவன் வாக்குத்தத்தம்பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழு நிச்சயமாய் நம்பி, தேவனைமகிமைப்படுத்தி, விசுவாசத்தில் வல்லவனானான்" (ரோமர் 4:21)

வானமும், பூமியும் ஒழிந்துபோனாலும் அவருடைய வாக்குத்தத்தங்கள் (வார்த்தைகள்) ஒருபோதும் ஒழிந்துபோவதில்லை. வேதத்திலே ஏறக்குறைய பதினைந்தாயிரம் வாக்குத்தத்தங்கள் உண்டு. அவர் உங்களுக்கு ஒரு வாக்குத்தத்தம் கொடுப்பாரானால், அதை நிறைவேற்றி முடிக்க வல்லவர். அப்படியே ஆபிரகாமுக்கு, "உன் சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப் போலவும். கடற்கரை மணலைப் போலவும் பெருகப்பண்ணுவேன்" என்று வாக்கு கொடுத்தார்! ஆபிரகாம், சாராள் இருவரும் வயது முதிர்ந்த பிறகும், ஆண்டவர் வாக்குப்பண்ணினதை நிச்சயம் தங்களுடைய வாழ்வில் நிறைவேற்றுவார் என்று நம்பினார்கள். அப்படியே ஆண்டவரும் ஆசீர்வாதமான சந்ததியைக் கொடுத்தார். அதே தேவன் உங்களுக்கும் கொடுத்த வாக்குத்தத்தங்களை நிறைவேற்ற வல்லமையுள்ளவராய் இருக்கிறார்! மனம் கலங்காதிருங்கள். விசுவாசத்தோடு அவரை நம்புங்கள்! அற்புதங்களை ருசியுங்கள். நாம் ஜெபிப்போமா!

ஜெபம்!

அன்பின் ஆண்டவரே! நீர் உயிர்த்தெழுந்த இந்த நாட்களிலே, இந்த மங்கள வார்த்தையைப் படிக்கும் ஒவ்வொருவரின் தனிப்பட்ட வாழ்க்கையையும், ஆவிக்குரிய வாழ்க்கையையும் பெரிதும் ஆசீர்வதியும்! அவர்களுக்கு உதவிசெய்யும்! எல்லாத் தீங்குகளுக்கும் அவர்களை விலக்கிப் பாதுகாத்துக்கொள்ளும்! நீர் அவர்களுக்குக் கொடுத்த அத்தனை வாக்குத்தத்தங்களையும் அவர்களுக்கு நிறைவேற்றி! நீர் சர்வ வல்லமையுள்ள தேவன் என்பதை அறிந்துகொள்ளச் செய்தருளும்! இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்.



வேத வினா போட்டி-10

ஏப்ரல் மாத கேள்விகள்

1) இஸ்ரவேல் புத்திரர் எகிப்திலே குடியிருந்த காலம் எவ்வளவு?
2) ஆரோனின் சகோதரி யார்?
3) 'மன்னா' என்று பெயரிட்டது யார்?
4) ஏலிமிலே எத்தனை நீரூற்றுகள் இருந்தது?
5) ஏலிமுக்கும், சீனாய்க்கும் இடையே உள்ள வனாந்திரம் எது?
6) மோசே பலிபீடத்தைக் கட்டி அதற்கு என்ன பெயரிட்டான்?
7) சூர் வனாந்திரத்தில் தண்ணீர் கிடைக்காமல் எத்தனை நாள் நடந்தார்கள்?
8) அடிமைத்தன வீடு எது?
9) எது பார்வை உள்ளவர்களைக் குருடாக்கும்?
10) சித்திரக்கொத்து வேலைக்காரன் யார்?

மார்ச் மாத விடைகள்

1) சிப்பிராள், பூவாள் (யாத்திராகமம்1:15)
2) ஜலத்தினின்று எடுத்தேன் (யாத்திராகமம் 2:10)
3) ஓரேப் (யாத்திராகமம் 3:1)
4) எத்திரோ (யாத்திராகமம்3:1)
5) ஏழு (யாத்திராகமம் 2:16)
6) பார்வோனுடைய குமாரத்தி (யாத்திராகமம் 2:5)
7) மோசே (யாத்திராகமம் 4:10)
8) யாத்திராகமம் 1:5)
9) தவளை (யாத்திராகமம் 8:6)
10) கோசேன் (யாத்திராகமம் 9:26)

குலுக்கல் முறையில் மார்ச் மாதப் பரிசை வென்றவர்கள்
1 Sis. A. தீபா, அவிநாசி, கோவை.
2 Sis. எலிசபெத் குணசீலன், K.K. நகர், சென்னை.

விதிமுறைகள்

1.சரியான விடை எழுதுபவர்களுக்கு, பரிசு கொடுக்கப்படும். அதிகமானவர்கள் சரியான விடை எழுதியிருந்தால், குலுக்கல் முறையில் பரிசளிக்கப்படும்.
2.விடைகள் அனைத்தும் வசன ஆதாரங்களுடன் இருக்கவேண்டும்.
3.விடைகள் ஒவ்வொருமாதமும் 20-ஆம் தேதிக்குள் கீழ்க்கண்ட விலாசத்திற்கு வந்துசேரவேண்டும்.

அனுப்ப வேண்டிய முகவரி:

Sis. ஜோஸ்பின் ஸ்டீபன்.
தேவனின் அன்பு ஊழியங்கள்,
எண்14. ராமலிங்க நகர், OMR ரோடு, SRP ஸ்கூல்ஸ் அருகில்,
கொட்டிவாக்கம், சென்னை - 600041
தொலைபேசி +91 44 2454 7999 || 99419 50999
Email: publications@godsloveministries.co.in
Website:www.godsloveministries.co.in

சாட்சி பகுதி:

ஆண்டவரின் அற்புதங்கள்!

சகோதரர் T. ஸ்டீபன் அவர்கள் ஆண்டவருடைய முழு நேர அழைப்பை பெற்று, "தேவனின் அன்பு ஊழியத்தை ஸ்தாபித்து" உலகெங்கிலும் தேவனால் வல்லமையாய் பயன்படுத்தப்படும் ஒரு கிருபாபாத்திரம். இவரது தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், மாதந்தோறும் முதல் சனிக்கிழமைகளில் இவர் நடத்தும் "அன்பரின் பாதத்தில் ஒரு நாள்" உபவாசக் கூடுகை மற்றும் முதல் ஞாயிற்றுக் கிழமைகளில் நடத்தும் "ஆறுதலைத் தேடி ஒரு நாள்" சுகமளிக்கும் ஆராதனைகள் உலகப் பிரசித்திபெற்றவை. விசேஷமாக, இவரது தனி ஜெபத்தில் ஆண்டவர் வெளிப்படுத்தும் மங்கள வார்த்தைகள், உள்ளம் உடைந்த அநேக மக்களை ஆறுதல்படுத்தியுள்ளது; அநேகரை சுகப்படுத்தியிருக்கிறது; ஆவிக்குரிய வாழ்வில் தொய்ந்தவர்களை, ஆண்டவரில் துளிர்விடச் செய்திருக்கிறது. இவரது ஊழியத்தின் மூலம் உலகெங்கிலும் அற்புதங்களைப் பெற்றுக்கொண்டோர் ஏராளம்! ஏராளம்! உங்கள் விசுவாசத்தை பெலப்படுத்தும்படி, சில சாட்சிகளை கீழே தந்துள்ளோம்:

மாமியாருக்கு அற்புதம் செய்த தேவன்!



ஜாக்குலின்,
கொருங்கையூர், சென்னை.

எனது மாமியாரின் இடது பக்க மார்பில் சிறிய கட்டி ஒன்று இருந்தது. அதிலிருந்து ரத்தமும், சீழும் வந்துகொண்டிருந்தது. இதனால் என் மாமியார் தாங்கமுடியாத வேதனையில் இருந்தார்கள். மருத்துவர் இது புற்றுநோயின் முதல் ஸ்டேஜ் என சொல்லிவிட்டார். என் மாமியாரின் சுகத்திற்காக சகோதரர் T. ஸ்டீபன் அவர்களுக்கு நான் ஒரு இமெயில் கடிதம் எழுதியிருந்தேன். கடிதத்தில், "என் மாமியாருக்கு சி.டி. ஸ்கேன் எடுக்கும்போது, கேன்சர் இருக்கிறது என்று ரிப்போர்ட் வரவே கூடாது" என்று தெரிவித்திருந்தேன். சகோதரர் அவர்கள் ஜெபித்து, 30 நிமிடங்களுக்குள் எனக்கு பதில் அனுப்பியிருந்தார்கள். "மகளே நீ கலங்காதே. உன் மாமியாரின் வியாதிப்படுக்கையை ஆண்டவர் முற்றிலும் மாற்றிப்போடுவார்" என்று எழுதியிருந்தார். என் மாமியாருக்கு 3 மணி நேரம் நடக்க வேண்டிய ஸ்கேன் ஒன்றரை மணி நேரத்திலேயே முடிந்தது. மருத்துவ அறிக்கையில் கேன்சர் இல்லை என நார்மல் ரிப்போர்ட் வந்தது. சகோதரரின் ஜெபத்தைக் கேட்டு என் மாமியாருக்கு அற்புதம் செய்த ஆண்டவருக்கே நன்றி செலுத்துகிறேன்.

குழந்தை பாக்கியம் தந்தார்!



குமாரி.
ஆந்திரா மாநிலம்

எனக்குத் திருமணம் முடிந்து 6 வருடங்கள் ஆகிவிட்டது. அண்டைவீட்டார், உறவினர்கள் யாவரும் இன்னும் உனக்குக் குழந்தை பிறக்கவில்லையா? என ஏளனமாகப் பேசினார்கள். நான் மிகுந்த வேதனையோடு "அன்பரின் பாதத்தில் ஒரு நாள்" உபவாசக் கூடுகைக்கு வந்து சகோதரரிடம் ஜெபித்துக்கொண்டேன். அப்பொழுது சகோதரர் அவர்கள், "இந்த மாதமே ஆண்டவர் உன்னை ஆசீர்வதித்துள்ளார்" என்று மங்கள வார்த்தை சொன்னார்கள். சகோதரரின் மங்கள வார்த்தையை நான் அப்படியே விசுவாசித்தேன். அதே மாதத்தில் நான் கருவுற்றேன். சுகப்பிரசவத்தில் அழகான பெண் குழந்தையை ஆண்டவர் கொடுத்தார். சகோதரின் ஜெபத்தைக் கேட்டு, எனக்கு 6 வருடங்களுக்குப் பிறகு அழகியதொரு பெண் குழந்தையை கொடுத்த தேவனுக்கும், ஜெபித்த சகோதரருக்கும் என் உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றிசெலுத்துகிறேன். அல்லேலூயா.

பதவி உயர்வும், கூடுதல் பொறுப்பும் கொடுத்தார்!



ஹேமமாலினி,
சென்னை

"அன்பரின் பாதத்தில் ஒரு நாள்" சுகமளிக்கும் ஆராதனையில் கலந்துகொண்ட பிறகுதான் எனக்கு வேலை கிடைத்தது. என்னுடைய பதவி உயர்வுக்காக எதிர்பார்த்து ஜெபித்துக்கொண்டிருந்தேன். அப்பொழுது ஆராதனையை நடத்திய பாஸ்டர் லியோ அவர்கள், "நான் தானே உனக்கு வேலையை கொடுத்தேன். உனக்கு என்ன செய்ய வேண்டுமென எனக்குத் தெரியாதா என்ன? நீ அவர்மேலே உன் பாரத்தைப் போடு" என்றார். மேலும் சகோதரர் ஸ்டீபன் அவர்களிடம் தனியாக ஜெபித்தபோது, "வாயை திறந்து கேட்டால்தான் ஆண்டவர் கொடுப்பார். ஒன்றுமே சொல்லாமல் அமைதியாக இருந்தால் உனக்கு எப்படி தருவார்!" நீ ஆண்டவரிடம் வாயை திறந்து கேள் மகளே, அதோடு உன்னுடைய சார்பாக ஏதாவது முயற்சி செய். ஆண்டவர் கண்டிப்பாக உனக்குக் கொடுப்பார்" என மங்கள வார்த்தை சொன்னார். சகோதரரின் மங்கள வார்த்தையின்படியே, நானே தைரியமாக என் உயர் அதிகாரியிடம் பதவி உயர்வு சம்பந்தமாக பேசினேன். மேலும் நாங்கள் குடும்பமாக கொட்டிவாக்கம் ஜெப கோபுரத்திற்கு வந்து ஜெபித்துக் கொண்டோம். ஜெப கோபுரத்திற்கு வந்த அன்றே சகோதரர் ஸ்டீபன் அவர்களிடமும் ஜெபித்துக் கொண்டேன். "ஒரு மனிதன் தடை செய்கிறான். அந்தத் தடை இப்பொழுதே நீங்குகிறது" என்று சொன்னார். என்ன ஆச்சரியம்! ஆண்டவர் என்னுடைய வேலையில், எனக்குப் பதவி உயர்வோடு கூட கூடுதல் பொறுப்பையும் கொடுத்தார்! சகோதரர் ஸ்டீபன் அவர்களின் ஜெபத்தைக் கேட்டு, எனக்கு பதவி உயர்வையும், கூடுதல் பொறுப்பையும் கொடுத்த தேவனுக்கே நன்றி செலுத்துகிறேன். அல்லேலூயா.

என் பேத்திக்கு உயிர்பிச்சை கொடுத்தார்!



வசந்திரவித்யாவின் பாட்டி
சென்னை

என் பேத்தியை அவளது தகப்பனார் அதிகமாக கடிந்து கொண்டதினால், 4-வது மாடியிலிருந்து கீழே விழுந்துவிட்டாள். எல்லாரும் என் பேத்தி இறந்துவிட்டாள் என்றார்கள். கொரோனா பொது முடக்க காலத்தில், சென்னை ராயப்பேட்டை மருத்துவமனையில் சேர்த்தோம். நான் உடனே தேவனின் அன்பு ஊழியத்தின் சென்னை அடைக்கலப்பட்டணத்தோடு தொடர்புகொண்டு ஜெபித்துக்கொண்டேன். "ஆண்டவர் நிச்சயம் அற்புதம் செய்வார். உங்கள் பேத்திக்கு பூரண சுகத்தைத் தருவார்" என்று ஜெப வீரர்கள் சொன்னார்கள். நானும் ஒவ்வொரு நாளும் 91-ஆம் சங்கீதத்தை உரிமை பாராட்டி, என் பேத்திக்காக ஜெபித்தேன். என்ன ஆச்சரியம்! ஆண்டவர் என் பேத்திக்கு சுகம் தந்தார். அவள் இப்பொழுது நன்றாக இருக்கிறாள். என் பேத்திக்கு ஜீவனைக் கொடுத்த இயேசப்பாவிடம் அவளை முற்றிலும் ஒப்புக்கொடுத்துவிட்டேன். என் பேத்தி நன்றாக நடக்க தொடர்ந்து ஜெபியுங்கள். தேவனின் அன்பு ஜெப கோபுரத்தில் ஏறெடுத்த ஜெபத்தைக் கேட்டு, அற்புதம் செய்த ஆண்டவருக்கே மகிமை செலுத்துகிறேன். அல்லேலூயா.

சி.ஏ. படிப்பில் வெற்றியையும், நல்ல கம்பெனியில் இன்டெர்ன்ஷிப்பும் கிடைக்கச் செய்தார்!



கவிதா, திருச்சி

நான் நவம்பர் 2018-ஆம் ஆண்டு சி.ஏ இண்டர்மீடியட் தேர்வுகளை எழுதியிருந்தேன். தேர்வுகளை எழுதும்போது கூட எனக்கு மிகுந்த பயம் இருந்தது. அநேக வினாக்கள் மிகவும் கஷ்டமாக இருந்தது. நான் எப்படி தேர்வுகளில் வெற்றிபெறப் போகிறேன் என்ற கேள்விக்குறியோடு இருந்தேன். இப்படிப்பட்ட சூழ்நிலையில், "ஆறுதலைத் தேடி ஒரு நாள்" சுகமளிக்கும் ஆராதனையில் கலந்துகொண்டு, சகோதரர் ஸ்டீபன் அவர்களிடம் ஜெபித்துக்கொண்டேன். என்ன ஆச்சரியம்! எனக்கு தேர்வு முடிவுகள் வந்தது. நான் அனைத்து சி. ஏ தேர்வுகளிலும் வெற்றிபெற ஆண்டவர் கிருபை செய்தார். அது மட்டுமல்ல, நல்ல கம்பெனியில் எனக்கு இன்டெர்ன்ஷிப் செய்யவும் ஆண்டவர் வழிவாசல்களை திறந்துகொடுத்தார். சகோதரரின் ஜெபத்தைக் கேட்டு, சி.ஏ படிப்பில் வெற்றிபெறவும், இன்டன்ஷிப் கிடைக்கவும் கிருபை செய்த தேவனுக்கே மகிமை செலுத்துகிறேன். அல்லேலூயா.

மார்வெல் திருமண தகவல் மையம்

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,

இயேசுவின் நாமத்தினாலே அன்பின் வாழ்த்துக்கள்!

திருமணம் என்பது பரலோகத்தில் நிச்சயிக்கப்பட்டது. ஆதாம் தனிமையாய் இருப்பது நல்லதல்ல என்று கண்ட ஆண்டவர், அவனுக்கு ஏற்ற துணையாக ஏவாளை உண்டுபண்ணினார் (ஆதியாகமம் 2:18,21,22). இன்றைக்கும் மணமகனுக்கு ஏற்ற மணவாட்டியை தெரிந்தெடுப்பது ஆண்டவருக்கு முன்பாகவும், அவரது வசனத்திற்கு முன்பாகவும் நேர்த்தியானதாக, அருமையானதாக இருக்கும்!

உங்கள் வசதிக்காக, நாங்கள் மிகுந்த ஜெபத்துடன் மார்வெல் திருமண தகவல் மையத்தை ஆரம்பித்து, பல வருடங்களாக நடத்தி வருகிறோம். எனவே, இத்திருமண மையத்தில் உங்கள் பிள்ளைகள் மற்றும் உறவினர்களுடைய பெயர்களை பதிவுசெய்து, அவர்களுக்கு ஏற்ற வாழ்க்கைத் துணைகளை தெரிந்தெடுக்குமாறு உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறோம். ஜெபத்தோடு இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ளுங்கள். கர்த்தருக்குச் சித்தமானது அவரது கரத்தினாலே உங்களுக்கு வாய்க்கும் (ஏசாயா 53:10). மகிமையான நல்விசேஷங்கள் உங்கள் குடும்பத்திலே வசனிக்கப்படும் / பேசப்படும் (சங்கீதம் 87:3).

மேலும் விபரங்களுக்கு 7824855999 என்ற எண்ணுடன் தொடர்புகொள்ளலாம் அல்லது எங்களது சென்னை, நாகர்கோவில் மற்றும் மும்பை நகரத்திலுள்ள ஜெப கோபுரங்களுக்கு நேரடியாக சென்றும் பதிவுசெய்துகொள்ளலாம். முகவரிகளை கீழே தந்துள்ளோம்:

சென்னை

தேவனின் அன்பு ஊழியங்கள், எண்.14, ராமலிங்க நகர், OMR ரோடு, SRP டூல்ஸ் அருகில், கொட்டிவாக்கம், சென்னை – 600 041.
மின்னஞ்சல்: info@marvelmatrimony.com, அலைபேசி: 78248 55999

மும்பை

தேவனின் அன்பு ஊழியங்கள், மும்பை ஜெப கோபுரம், எண்.L-411, ட்ரீம்ஸ்-தி-மால், எல்.பி.எஸ். மார்க், சாகர் விஹார் அருகில், பாண்டுப் மேற்கு, மும்பை – 400 078. அலைபேசி: 9930737999

நாகர்கோவில்

தேவனின் அன்பு ஊழியங்கள், நாகர்கோவில் ஜெப கோபுரம், பாக்கியம் திருமண மண்டப வளாகம், எண். 177, WCC ரோடு, YMCA எதிர்புறம், நாகர்கோவில் – 629 001, கன்னியாகுமரி மாவட்டம். அலைபேசி: 9884480999

அதுமட்டுமல்ல திருமணம், வரவேற்பு போன்ற சுபநிகழ்வுகளில் புகைப்படம் எடுத்தல் (Wedding and Reception photography), வீடியோ எடுத்தல் (Video Coverage) போன்ற பிற சேவைகளையும் நாங்கள் வழங்குகிறோம். விபரங்களுக்கு, www.marvelmatrimony.com என்ற வலைத்தளத்தைப் பார்க்கவும் அல்லது 78248 55999 என்ற எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

சிறுவர்கள் பகுதி

(குட்டீஸ் ஸ்பெஷல்):



வெற்றி வேண்டுமா!... போராடு!

(சகோதரி **ஸ்டெஃபி ஸ்டீபன்,**
தேவனின் அன்பு ஊழியங்கள், சென்னை)

ஹாய் குட்டீஸ்,

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் ஈஸ்டர் நல்வாழ்த்துக்களை கூறிக்கொள்கிறேன்!

இந்த ஈஸ்டர் மாதத்தில் உங்களை சந்திப்பதில் எனக்கு அதிக சந்தோஷம். எல்லோரும் சந்தோஷமாக இருக்கிறீர்களா? இந்த மாதத்திலும், ஒரு குட்டிக் கதையோடு உங்கள் முன்னால் வந்திருக்கிறேன். குட்டிப் பிள்ளைகளாகிய நமக்கு ஆண்டவர் அநேக வாய்ப்புகளை கொடுத்திருக்கிறார். இந்த சிறு வயதிலே, நீங்கள் அநேக காரியங்களை சாதிக்க நினைக்கலாம்! படிப்பு, விளையாட்டு, பொது சேவை போன்ற துறைகளில் சாதனையாளர்கள் பட்டியலில், உங்கள் பெயரும் இடம் பெறலாம்! இதற்கு நாம் செய்ய வேண்டியது ஒன்றே ஒன்று தான். முயற்சி மாத்திரமே! ஆனால், நாம் முயலுவதில்லை! எப்பொழுதும் சோம்பேறிகளாய் இருப்பவர்களை, ஆண்டவருக்குப் பிடிக்கவே பிடிக்காது. சோம்பேறியைக் குறித்து வேதம் சொல்லுகிறது:

"சோம்பேறியே, நீ எறும்பினிடத்தில்போய், அதின் வழிகளைப் பார்த்து, ஞானத்தைக் கற்றுக்கொள். அதற்குப் பிரபுவும், தலைவனும், அதிகாரியும் இல்லாதிருந்தும், கோடைகாலத்தில் தனக்கு ஆகாரத்தைச் சம்பாதித்து, அறுப்புக்காலத்தில் தனக்குத் தானியத்தைச் சேர்த்துவைக்கும்" (நீதி 6:6-8)

ஒரு கிராமத்தில் அநேக மக்கள் வாழ்ந்து வந்தனர். ஆனால் அவர்கள் அனைவரும் சோம்பேறிகளாக இருந்தார்கள். இதை அறிந்த, அந்த நாட்டு ராஜா, நாட்டு மக்களுக்குப் பாடம் புகட்ட விரும்பினார். ராஜா நள்ளிரவில், அந்த கிராமத்து ரோட்டின் நடுவே ஒரு பெரிய கல்லை வைத்துவிட்டுச் சென்றுவிட்டார். தினந்தோறும் அந்த வழியாக வருகிறவர்கள் அந்தக் கல்லின்மேல் அமர்ந்து, இளைப்பாறிச் சென்றனரே தவிர, யாரும் அந்தக் கல்லை ரோட்டைவிட்டு, அப்புறப்படுத்த நினைக்கவில்லை. அநேகருடைய கால்களிலே அந்தக் கல் தட்டுப்பட்டது உண்மை தான்! ஆனாலும் அவர்கள் அதை அப்புறப்படுத்தவில்லை. ராஜாவுக்கோ ஒரே வருத்தம். யாரும் அந்தக் கல்லை தூக்கிப் போடவில்லையே. எல்லாரும் பார்த்துவிட்டு, கடந்துபோய்விடுகிறார்களே என்று நாட்டு மக்களின் சோம்பேறித்தனமான நிலைமையைக் குறித்து வேதனை அடைந்தார்!

ஒரு நாள் ஒரு ஆடு மேய்ப்பவர் அந்த வழியாக வந்து, அந்தக் கல்லின்மேல் அமர்ந்து, இவ்வாறு யோசித்தார், "என்ன தான் நமக்கு இளைப்பாற வசதியாக இருந்தாலும், அநேகருக்கு இந்தக் கல் இடையூறாக இருக்கிறதே? ஏப்படியாவது நாம் இதை அப்புறப்படுத்த வேண்டும் என்று எண்ணி, அந்தக் கல்லை ரோட்டைவிட்டு அகற்றிவிட்டார். என்ன ஆச்சரியம்! அந்தக் கல்லுக்கு அடியில், ஒரு பையில் நிறைய பொற்காசுகளோடு, ஒரு கடிதமும் இருந்தது. அவர் அந்தக் கடிதத்தை எடுத்துப் படித்தபோது, "இந்தக் கல்லை யார் அகற்றுகிறார்களோ, அவர்களுக்கு

இந்தக் கல்லின் அடியிலுள்ள பொற்காசுகள் அனைத்தும் சொந்தம்" என்று ராஜா எழுதி வைத்திருந்தார். கல்லை அப்புறப்படுத்தியது ஒரு சாதாரண ஆடு மேய்ப்பவன் என்பதை அறிந்த ராஜா, அவனை பாராட்டி, அவனுக்கு இன்னும் அதிக வெகுமதிகளை கொடுத்தார்!

எனக்கு மிகவும் அருமையான சிறு பிள்ளைகளே, நாம் கூட அநேக நேரங்களிலே, "இது என்னால் முடியாது" என்றே அநேக வாய்ப்புகளை இழந்துவிடுகிறோம். வெற்றி வாய்ப்புகளுக்காக உழைப்பதே கிடையாது. ஒரு நாளும் நாம் அப்படி இருக்கவே கூடாது. தொடர்ந்து முயற்சி செய்து வெற்றிபெற வேண்டும். வெற்றியைக் குறித்து வேதம் இவ்வாறு கூறுகிறது:

"நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்" (1 கொரிந்தியர் 15:57)

ஆகவே, நீங்கள் சோம்பேறித்தனத்தை உதறித்தள்ளி, முயற்சி செய்து, வெற்றிபெற இந்த ஈஸ்டர் நன்நாளில் உங்களை வாழ்த்துகிறேன். பவுலடிகளாரின் கூற்றுப்படி:

"...நடுகிறவனாலும் ஒன்றுமில்லை, நீர்ப்பாய்சுகிறவனாலும் ஒன்றுமில்லை, விளையச்செய்கிற தேவனாலே எல்லாமாகும்" (1 கொரிந்தியர் 3:7))

என்ற வேத வசனத்தை உறுதியாய் பிடித்துக்கொண்டு, தொடர்ந்து முயற்சி செய்யுங்கள். உங்கள் முயற்சி ஒரு நாள் வெற்றியடையும்போது, ஆண்டவர் உங்களை பெரிய நிலைக்குக் கொண்டு வந்திருப்பார். எந்தவொரு பொருளும் நமக்கு அவ்வளவு எளிதாகக் கிடைத்துவிடாது. அதைப் பெற்றுக்கொள்வதற்காக முயற்சி செய்யும்போது தான், அது நமக்கு கிடைக்கும்! நாமும் முயற்சி செய்வோமா? நமக்கு வெற்றி நிச்சயம்! ஆமென்.

ஜெபம்:

அன்பின் ஆண்டவரே, இந்த மங்கள வார்த்தையை வாசித்துக்கொண்டிருக்கிற சிறு பிள்ளைகளுக்காக கண்ணீரோடு ஜெபிக்கிறேன். ஆண்டவரே, இவர்கள் சிறு வயதிலேயே சோம்பேறித்தனத்தை விட்டு எழும்பி, தொடர்ந்து முயற்சி செய்து, தங்கள் வாழ்விலே முன்னேற அருள் செய்தருளும்! அவர்கள் ஒவ்வொருவரையும் நீரே கரம் பிடித்து நடத்தும்! இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்.



வாலிபர் பகுதி:





உயிர்த்தெழுந்தவரின் வல்லமை!

(சகோதரி பவ்யா டெரில்,
தேவனின் அன்பு ஊழியங்கள், சென்னை)

என் அன்பு வாலிப தம்பி, தங்கைகளே,

உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் ஈஸ்டர் நல்வாழ்த்துக்களை கூறிக்கொள்கிறேன்!

இந்த மாதமும் உங்களை சந்திப்பதிலே மிக்க மகிழ்ச்சி! நம் ஆண்டவர் மரணத்தை ஜெயமாக விழுங்கினவர் (ஏசாயா 25:8), இன்றைக்கும் அவர் உயிரோடு இருக்கிறார். இயேசு எதற்காக மரித்தார்? எதற்காக உயிர்த்தார்? எல்லாமே நமக்காகத்தான்! உலகத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் மரிக்கிறார்கள். எல்லாருடைய கல்லறைகளும் மூடிக்கிடக்கிறது. ஆனால் நம் இயேசுவின் கல்லறையோ திறந்திருக்கிறது. இதனால் அறிந்துகொள்ளுவது என்ன? அவர் இங்கே இல்லை. உயிர்த்தெழுந்தார் (லூக்கா 24:6). அதையே நாம் ஈஸ்டர் தினமாக அனுசரிக்கிறோம்! ஒவ்வொரு வருடமும் இந்த ஈஸ்டர் பண்டிகையை வெறும் சடங்காச்சாரமாக இல்லாமல், 40 தினங்களும் ஆண்டவருடைய வல்லமையை தரித்துக்கொண்டவர்களாய், தினமும் பரிசுத்தத்தைக் காத்து, நடக்க நம்மை ஒப்புக்கொடுப்போம். அப்பொழுது தான் அவர் நம்மோடு கூட இருந்து நம்மை பரிசுத்தமாய் நடத்துவார்!

இந்த பண்டிகை காலங்களில், உயிர்த்தெழுந்த இயேசுவினுடைய வல்லமை நமக்கு எவற்றையெல்லாம் பெற்றுத் தருகிறது என்பதை பார்ப்போமா!

1) முதலாவது, சமாதானம் உண்டாகிறது:

"...இயேசு தாமே அவர்கள் நடுவிலே நின்று, உங்களுக்குச் சமாதானம் என்றார்" (லூக்கா 24:36)

இயேசு மரணமடைந்த பின்பு சீஷர்கள் பயந்துபோய் கலக்கத்தோடு ஒரு வீட்டின் அறையிலே எதிர்காலத்தைக் குறித்த கேள்விக்குறியோடு இருந்தார்கள். அந்த வேளையிலே இயேசு வந்து உங்களுக்குச் சமாதானம் என்றார். எவ்வளவு அருமையான தேற்றுகிற வார்த்தை அது! அவர் கொடுக்கிற சமாதானம் உலகத்தார் கொடுக்கிற சமாதானம் அல்ல. நிரந்தரமான சமாதானம். வேதம் சொல்லுகிறது:



"உம்மை உறுதியாய்ப் பற்றிக் கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால். நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர்" (ஏசாயா 26:3)

என் அன்பு வாலிப தம்பி, தங்கைகளே, ஒரு வேளை உங்கள் வாழ்க்கையில் கூட நீங்கள் சமாதானத்தை இழந்து, அடுத்து என்ன செய்வதென்றே தெரியாமல், முடங்கிப் போய் இருக்கலாம். சமாதானத்தைத் தேடி அங்கும் இங்கும் அலைந்து கொண்டிருக்கலாம். நிரந்தர சமாதானத்தைக் கொடுக்கிற ஆண்டவரை இறுகப் பற்றிக்கொள்ளுங்கள். அப்பொழுது அவர் உங்களைத் தேற்றி, உங்களுக்கு சமாதானத்தை தந்தருளுவார்! (யோவான் 14:27).

2) இரண்டாவது, பயம் நீங்குகிறது:

"...அப்பொழுது அவர் தம்முடைய வலதுகரத்தை என்மேல்வைத்து. என்னை நோக்கி: பயப்படாதே, நான் முந்தினவரும் பிந்தினவரும், உயிருள்ளவருமாயிருக்கிறேன்" (வெளி 1:17)

இயேசு தம்முடைய சீஷர்களுக்குத் தரிசனமாகும் முன்பாக, சீஷர்கள் யூதர்களுக்கும், ரோம அரசாங்கத்திற்கும் பயந்திருந்ததினால், அவர்கள் கதவுகளைப் பூட்டிக்கொண்டிருந்தார்கள். மரண பயம் அவர்களை வாட்டியது. அப்பொழுது இயேசு அவர்களுக்கு தரிசனமாகி, பயப்படாதேயுங்கள் என்றார். பயநேரத்தில் எதைப் பார்த்தாலும் கலக்கமாகத்தான் இருக்கும். அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்பார்கள். மாயையான உலகில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். வாலிபர்களாகிய நமக்கு, எதிர்காலத்தைக் குறித்த பயம் இருக்கிறது. ஆகவே நீங்கள் பயத்தின் ஆவிகளுக்கு ஒருபோதும் இடம் கொடுக்காதிருங்கள். தாவீது சொல்லுகிறார்:

"நான் கர்த்தரைத் தேடினேன், அவர் எனக்குச் செவிகொடுத்து, என்னுடைய எல்லாப் பயத்துக்கும் என்னை நீங்கலாக்கிவிட்டார்" (சங்கீதம் 34:4)

அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும்போது:

"தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்" (2 தீமோத்தேயு 1:7)

எனவே, பயத்தை களைந்துபோட்டு, ஆண்டவரை இறுகப்பிடித்துக்கொண்டு, வாழ்க்கையில் முன்னேறி, வெற்றி நடைபோடுங்கள்! ஆண்டவர் உங்கள் வாழ்வில் அற்புதங்களைச் செய்வார்! நீங்கள் வாழ்ந்து சுகித்திருப்பீர்கள்!

3) மூன்றாவதாக, ஆசீர்வாதம் கிடைக்கிறது:

"பின்பு அவர் பெத்தானியாவரைக்கும் அவர்களை அழைத்துக்கொண்டு போய், தம்முடைய கைகளை உயர்த்தி, அவர்களை ஆசீர்வதித்தார்" (லூக்கா 24:50)

நம் ஆண்டவர் எப்பொழுதும் நம்மை ஆசீர்வதிக்கப் பிரியப்படுகிறவர். அதில் இம்மைக்குரிய, மறுமைக்குரிய, உன்னதத்திற்குரிய ஆசீர்வாதங்கள் அடங்கும். அவருடைய ஆசீர்வாதமே நமக்கு ஐசுவரியத்தைத் தரும் (நீதி 10:22). அவர் இடங்கொள்ளாமல் நம்மை ஆசீர்வதிக்கிறவர் (மல்கியா 3:10). இயேசு தம்மை பின்பற்றி வந்த சீஷர்களை பெத்தானியா என்கிற இடம் வரைக்கும் அழைத்து வந்து அவர்களை ஆசீர்வதித்தார். ஒரு வேளை உங்களுடைய வாழ்க்கையிலே என்ன ஆசீர்வாதம் குறைவுபட்டு காணப்படுகிறது? படிப்பு என்கிற ஆசீர்வாதமா? ஞானம் என்கிற ஆசீர்வாதமா? பணம் என்கிற ஆசீர்வாதமா? கலங்காதிருங்கள்! அவரை நோக்கிப் பாருங்கள். நீங்கள் இருக்கிற இடத்திலே, உங்கள் பெயரைப் பெருமைப்படுத்தி, உங்களை ஆசீர்வதிக்கிறவர், நம் ஆண்டவர்! எனவே அந்த வல்லமையான தேவனை விட்டுவிடாதிருங்கள்! நாம் ஜெபிப்போம்!



ஜெபம்:

அன்பின் ஆண்டவரே, இந்த மங்கள வார்த்தையை வாசிக்கிற ஒவ்வொரு வாலிபப் பிள்ளைகளுக்காக நீர் சிலுவையில் பாடுபட்டு, மரித்து உயிர்த்த இந்த பண்டிகை காலங்களில், உம்முடைய பரிபூரண சமாதானத்தினால், சந்தோஷத்தினால் அவர்கள் ஒவ்வொருவரையும் நிரப்பியருளும். அவர்கள் இருதயத்திலுள்ள பயங்களையெல்லாம் நீக்கி, உலக வாழ்விலும், ஆன்மீக வாழ்விலும் அவர்களை ஆசீர்வதித்து உயர்த்தியருளும்! இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்!


APRIL
03
SATURDAY
9:30 AM
2:30 PM
தேவனின் அன்பு ஊழியங்கள்
நடத்தும்
ANBARIN PAATHATHIL ORU NAAL
அன்பரின் பாதத்தில்
ஒரு நாள்
LIVE STREAMING ON
Evg.T.Stephen
godsloveministries.co.in
LIVE TELECASTING ON
ADHISAYAM TV TCCL 737 TAMILNADU
SHAMMAH TV TCCL 182 KANYAKUMARI DIST
ARK TV TCCL 700 TAMILNADU
THUTHI TV
VENUE
BKN AUDITORIUM.
5/6, RITHERDON RD, VEPERY,
(ANITHA MATRICULATION SCHOOL)
CHENNAI, 600007
PRAISE & WORSHIP
Pas. Leo Nelson
WORD OF GOD
Evg. T. Stephen


ஏப்ரல்
09
வெள்ளி
காலை
9:30
கிருபாசனம் கிருபையின்
ஜெபவீடு திறப்பு விழா
இடம்:
எண்-56 A
பெரும்பேடு மெயின் ரோடு
பெரும்பேடு
பொன்னேரி தாலூகா
பாடல் ஆராதனை
சகோ.J. அருள் ராஜ்
சகோதரி. வித்யா
FIRE ANOINTING MINISTRIES. சென்னை
தொடர்புக்கு
Pr.A. ஸ்டீபன்
9003171319
தேவ செய்தி
சகோ.T. ஸ்டீபன்
தேவனின் அன்பு ஊழியங்கள். சென்னை


ஆலய பிரதிஷ்டை
ஆராதனை
17
ஏப்ரல்
சனிக்கிழமை
காலை
10:00
மணி
இடம்:
தேவ கிருபை சபை
ரிலையன்ஸ் பங்க் அருகில்
இராசிபுரம் ரோடு ஆண்டஹூர் கேட்,
இராசிபுரம்
REV.ஆமோஸ்
தேவ செய்தியும்
பிரதிஷ்டை ஜெபமும்
சகோ.T.ஸ்டீபன்
தேவனின் அன்பு ஊழியங்கள், சென்னை.
தொடர்புக்கு 98650 77495 || 94436 22505


நாள்
ஏப்ரல் 23,24,25
வெள்ளி, சனி, ஞாயிறு.
நேரம்
மாலை 06 மணிக்கு
12 - ஆம் வருட
ஸ்தோத்திரப் பெருவிழா
இடம்:
ஏலீம் மகிமையின் ஜெப வீடு.
எண் 1, பார்த்த சாரதி நகர்,
11-வது தெரு, ஆதம்பாக்கம்,
சென்னை-88
தொடர்புக்கு: 9884377527
9962256168
பாஸ்டர்.L.செபாஸ்டின்

தொலைக்காட்சி ஊழியங்களின் விபரங்கள்

தினந்தோறும்

கீழ்காணும் டிவி சேனல்களின் மூலமாக நமது தேவனின் அன்பு ஊழியத்தின் மங்கள வார்த்தைகளை கேட்டு தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்

நம்பிக்கை டிவியில் தினமும் இரவு 11.00 முதல் 11.30 வரை

Satellite Channel - SCV 757, Airtel 817, Tata Sky 1592, Videocon 578, TCCL 743, Sun Direct 611, Polimer TV 726, Aadhar 879, Akshaya cable 606, Arasu Cable 600, Jio 4G Mobile Service Provider

அதிசயம் டிவியில் தினமும் காலை 6.30 முதல் 7.00 வரை

Tamilnadu - TCCL 737 | Kanyakumari - JAK 136 | Nagai & Theni - SCV 332 | Singapore Malasiya & Worldwide - BeeipTv 227 | USA, Canada & England - Starone IPTv 1426 Android smart TV

ஹெவன் டிவியில் தினமும் காலை 8.00 முதல் 8.30 வரை

Tamilnadu - TCCL 729, Polimer VK Digital 715 | Kanyakumari - SCV 214, AMN Digital Network 812

ஷம்மா டிவியில் தினமும் காலை 10.00 முதல் 10.30 வரை மற்றும் இரவு 9.00 முதல் 9.30 வரை

Kanniyakumari Dist - SCV 223, VK Digital 223, TCCL 182

ஜீசஸ் டிவியில் தினமும் காலை 8.30 முதல் 9.00 வரை

Kanniyakumari - TCCL 181 | Airtel XStream Set top box

கிராஸ் டிவியில் தினமும் காலை 9.30 முதல் 10.00 வரை

Tamilnadu - TCCL 734

நித்யம் டிவியில் தினமும் இரவு 9.30 முதல் 10.00 வரை

Tamilnadu, Andhra, Karnataka, Singapore, Malasiya, Canada, USA, UK, Australia
TCCL 728 I Aadhar 528 I Apple 528 I Amn 728

வாணி டிவியில் தினமும் காலை 6.30 முதல் 7.00 வரை மற்றும் இரவு 8.00 முதல் 8.30 வரை

Tirunelveli & Tenkaasi - JAK Digital 120

ஆல்மைட்டி டிவியில் தினமும் இரவு 7.00 முதல் 7.30 வரை

Chennai - Crystal 160



வாரந்தோறும்

ஞாயிறுதோறும்

Angel TV
12.00 AM
12.30 AM
Satellite Channel

Living Jesus Tv
7.30 AM | 1.30 PM | 8.30 PM | 10.30 PM
8.00 AM | 2.00 PM | 9.00 PM | 11.00 PM
Coonoor, Ooty, Coimbatore, Coodalur - CTN 801, VK Digital 117, Digcon 85,

திங்கள்தோறும்

Angel TV
5.00 AM
5.30 AM
Satellite Channel

Living Jesus Tv
7.30 AM | 8.30 PM | 10.30 PM | 1.30 PM
8.00 AM | 9.00 PM | 11.00 PM | 2.00 PM
Coonoor, Ooty, Coimbatore, Coodalur
CTN 801, VK Digital 117, Digcon 85,

நம்பிக்கை TELEVISION
7.30 AM
8.00 AM
Satellite Channel

செவ்வாய்தோறும்

Angel TV
5.00 AM | 9.00 PM
5.30 AM | 9.30 PM
Satellite Channel

Living Jesus Tv
7.30 AM | 8.30 PM | 10.30 PM | 1.30 PM
8.00 AM | 9.00 PM | 11.00 PM | 2.00 PM
Coonoor, Ooty, Coimbatore, Coodalur - CTN 801,
VK Digital 117, Digcon 85,

புதன்தோறும்

Angel TV
8.00 AM
8.30 AM
Satellite Channel

Living Jesus Tv
7.30 AM | 8.30 PM | 10.30 PM | 1.30 PM
8.00 AM | 9.00 PM | 11.00 PM | 2.00 PM
Coonoor, Ooty, Coimbatore, Coodalur - CTN 801, VK Digital 117, Digcon 85,

வியாழன்தோறும்

தெய்வன் HEAVEN TV INDIA
8.30 PM
9.00 PM
TamilNadu

Living Jesus Tv
7.30 AM | 1.30 PM | 8.30 PM | 10.30 PM
8.00 AM | 2.00 PM | 9.00 PM | 11.00 PM
Coonoor, Ooty, Coimbatore, Coodalur
CTN 801, VK Digital 117, Digcon 85,

SUBHAVAARTHA TELEVISION
7.30 AM
8.00 AM
Satellite Channel

வெள்ளிதோறும்

Angel TV
8.00 AM
8.30 AM
Satellite Channel

Living Jesus Tv
7.30 AM | 1.30 PM | 8.30 PM | 10.30 PM
8.00 AM | 2.00 PM | 9.00 PM | 11.00 PM
Coonoor, Ooty, Coimbatore, Coodalur - CTN 801, VK Digital 117, Digcon 85,

சனிதோறும்

KING OF GLORY
7.30 PM
8.00 PM
Pondicherry

Living Jesus Tv
7.30 AM | 1.30 PM | 8.30 PM | 10.30 PM
8.00 AM | 2.00 PM | 9.00 PM | 11.00 PM
Coonoor, Ooty, Coimbatore, Coodalur - CTN 801, VK Digital 117, Digcon 85,

ANGEL TV DETAILS (Satellite Channel)

SUN DIRECT 610 | TATA Sky 1591 | SCV 260 | AIRTEL DTH 815

எங்கள் சேவைகள்



24X7 மணி நேர ஜெப உதவிக்கு

உங்கள் ஜெபக் குறிப்புகளுக்காக ஜெபிக்க, நீங்கள் எந்த நேரத்திலும் தொலைபேசி மூலம் எங்களை அழைக்கலாம். எங்கள் ஜெப வீரர்கள் 24 மணி நேரமும் உங்களுக்காக ஜெபிக்க ஆயத்தமாய் இருக்கிறார்கள்.

044 2454 7999
99419 50999

மின்னஞ்சல் ஜெப உதவிக்கு

உங்கள் ஜெபக் குறிப்புகளை சகோ.T.ஸ்டீபன் அவர்களுக்கு அனுப்பி, ஆண்டவரிடமிருந்து பதில்களைப் பெற:

prayer@godsloveministries.co.in

சமூக வலைத்தளம்:

Evg.T.Stephen

9841040999

Owned, Edited and Published by **Sis.Josephin Stephen**

தேவனின் அன்பு ஊழியங்கள்

எண்.14, ராமலிங்க நகர் OMR ரோடு,
SRP டூல்ஸ் அருகில் கொட்டிவாக்கம், சென்னை - 600 041
தொலைபேசி: +91 44 2454 7999 / 99419 50999
prayer@godsloveministries.co.in www.godsloveministries.co.in